# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2024

## தமிழ் - ஆண்டு 5

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

ஔவையார் ஒரு தமிழ்ப் பெண்புலவர். அவர் பல அறநூல்களை எழுதினார். அவற்றுள் ஆத்திசூடி வரிகளை நாங்கள் வகுப்பில் படித்தோம். ஆத்திசூடியில் பிறருக்கு உதவ வேண்டும் எனக் கூறப்படுகிறது. அதனால், நானும் எனது தமிழ்ப்பள்ளி நண்பர்களும் சேர்ந்து, தாயகத்தில் இருக்கும் மாணவர்களுக்குப் பள்ளிப்பைகள் வாங்கிக் கொடுத்து உதவினோம். தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் எங்களைப் பாராட்டினார்கள். எம்மைப் போலவே ஆண்டு ஆறு, ஆண்டு ஏழு கற்கும் மாணவர்கள் இணைந்து உதவ முன்வந்தனர்.